SC No. 11 / 2021
PW 19–
Name : Dr.Arunmozhi

சாட்சி காணொளி காட்சி வாயிலாக ஆஜர்.

எதிரி ஆஜர்.

**<u>சாட்சி மனுவின் பேரில் அ ழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

நான் பிரேத பரிசோதனை செய்வதற்கு சுமார் 12 முதல் 16 மணிநேரத்திற்கு முன்பு கிருஷ்ணமூர்த்தி இறந்திருக்கலாம். உடம்பின் வெப்ப நிலையை நான் பார்க்கவில்லை. வெட்டுக்காயத்திற்கும் குத்துக்காயத்திற்கும் வித்தியாசம் உள்ளது. குத்துக்காயம் ஆழமாக இருக்கும். ஆழத்தை வைத்து சொல்லலாம். காயத்தின் அளவை இன்ச் கணக்கில் சொல்ல முடியுமா என்றால் சுமார் 2 3/4 இன்ச் இருக்கும். இருதயத்தில் வெட்டுக்காயம் ஒருதடவை வெட்டியது போன்று இருந்தது. 2 தடவை குத்தியதாக காணப்பட்டதா என்றால் இல்லை. ஒருதடவை குத்தியதாக காணப்பட்டது. இருதயத்தில் இருந்த காயம் குத்துக்காயம் என்று கூறமுடியாது என்றால் அது ஆழமாக சென்றிருப்பதால் குத்துக்காயம் என்று Consider செய்யலாம். ஆழத்தின் அளவை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அளவை சொல்லவில்லை. இருதயம் வரை இருந்ததால் சொல்லவில்லை. 9 செ.மீ அளவில் குத்துக்காயம் ஏற்படுத்த முடியுமா என்றால் 9 செ.மீ நீள அளவில் குத்துக்காயம் ஏற்படுத்த முடியும். நான் முதல் விசாரணையில் குத்துக்காயம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 100 மில்லி அளவில் உணவு இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேன். எந்த வகையான உணவு என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட இயலாது. மது அருந்தியதாக பிரேத கூராய்வின்போது தெரிந்ததா என்றால் அம்மாதிரி வாடை வரவில்லை. கும்பலாக ஒருவரை ஒருவர் தாக்கும்போதுஇடையில் ஒருவர் தவறுதலாக தாக்கினால் முதல்விசாரணையில்

சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் கூர்மையான ஆயுதத்தால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது.  கூர்மையான கம்பியின் மேல் விழுந்தால் முதல்விசாரணையில் சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

மறுவிசாரணை - இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.04 18:18:53 +0530

Principal District Judge,
Dindigul.